# *இயேசுவின் ஊழியம்*

## *மலைப்பிரசங்கம்*

***மத்தேயு 5:1-2, அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். 2. அப்பொழுது அவர் தமது வாயைத்திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்:***

***மத்தேயு 4:23-25, பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார். 24. அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார். 25. கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள்.***

*இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைக் குறித்த இரண்டு அடையாளங்களை மத்தேயு பதிவுசெய்கிறார்.*

1. *அவருடைய வார்த்தைகள்*
2. *அவருடைய செய்கைகள்*

*இன்றிலிருந்து* ***மத்தேயு 5-7*** *அதிகாரங்களைக் குறித்துப் பார்க்கப் போகிறோம்.*

*நாம் இயேசுவின் மலைப்பிரசங்கம் என்னும் பிரபலமான வேதவாக்கியங்களுக்கு வருகிறோம்.*

***3-11 வசனங்களில்*** *"பாக்கியவான்" என்னும் வார்த்தை இடம்பெற்றுள்ளது.*

*இதுவே மலைப்பிரசங்கம். இதுவே ஆசீர்வாதத்திற்கான வார்த்தைகள்.*

***வச. 1-2, அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். 2. அப்பொழுது அவர் தமது வாயைத்திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்:***

*மக்கள் வழக்கமாய் கேட்கும் காரியங்களைப் போலல்லாமல் இயேசு வித்தியாசமான செய்தியை அவர்களிடம் பேசினார். சீஷர்களும் அவற்றை ஆர்வமுடன் கேட்டனர். தேவனால் மட்டுமே கொடுக்க முடிந்த ஒரு உள்ளான மகிழ்ச்சியைக் குறித்து அவர் பேசினார். அதை அவர் ஏழைகள், துயரப்படுபவர்கள், சாந்தகுணமுள்ளவர்கள், பசிதாகமுள்ளவர்கள், இரக்கமுள்ளவர்கள், இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள், சமாதானம் பண்ணுகிறவர்கள், உபத்திரவப்படுகிறவர்கள் மற்றும் துன்பப்படுகிறவர்கள் என்று விரும்பப்படாத மக்கள் கூட்டத்திற்குப் பிரசங்கிக்கிறார்.*

*இயேசு எப்போதுமே மக்களுக்காய் பரிதபித்தார். அவர்கள் இயேசுவின் கவனத்தை ஈர்த்து அவர்களுக்காய் பரிதபிக்கும்படி செய்தனர்.*

*அவர் மக்கள் திரளைக் காணும்போது அவர்களை மேய்ப்பனில்லாத ஆடுகளாய் கண்டார்.*

*அவர்கள் பசியாயிருந்தபோது இயேசு அவர்களை போஷித்தார்.*

*அவர்கள் வியாதியாயிருந்தபோது இயேசு அவர்களை சொஸ்தமாக்கினார்.*

*அவர்கள் பேதைகளாயிருந்தபோது, இயேசு அவர்களை படிப்பித்தார்.*

*ஜனங்களை அவரண்டை ஈர்க்கும் திறன் அவரிடம் இருந்தது.*

*அவர்களும் அவரை நோக்கி வந்தனர்.*

*கலிலேயா, தெக்கபோலி, எருசலேம், யூதேயா மற்றும் யோர்தானுக்கு அப்புறத்திலிருந்த திரள் கூட்ட மக்கள் அவரை பின்பற்றினர்.*

*அதில் ஆயக்காரர்களும் பரிசேயர்களும் இருந்தனர்.*

*அதில் சடங்குவாதிகளும் நியாயசாஸ்திரிகளும் இருந்தனர்.*

*அதில் வேசிகளும் விபச்சாரக்காரர்களும் இருந்தனர்.*

*அதில் மேதைகளும் அஞ்ஞானிகளும் இருந்தனர்.*

*அதில் சுத்திகரிக்கப்பட்டவர்களும் அவமாய் போனவர்களும் இருந்தனர்.*

*அதில் ஐசுவரியவான்களும் தரித்திரரும் இருந்தனர்.*

*அதில் ஆரோக்கியமானவர்களும் வியாதியஸ்தர்களும் இருந்தனர்.*

*அதில் ஆண்களும் பெண்களும் இருந்தனர்.*

*அங்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி என்னவென்றால், தேவனுக்கு ஒரு இராஜ்யம் இருக்கிறது, மக்கள் அந்த இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியும் என்பதே. அது ஆவிக்குரிய இராஜ்யம், அவர்கள் அதற்குள் உட்பிரவேசிக்க முடியும். மெய்யான மகிழ்ச்சிக்கான பாதை அதில் இருந்தது.*

*அவர்கள் இரண்டாம்பட்ச மக்கள் திரளாயிருந்தார்கள். ஏனென்றால் அவர் மலை மீது ஏறிப்போனார் என்று வேதம் சொல்லுகிறது.*

*கலிலேயா கடலின் வடதிசையில் அமைந்திருந்த ஏதோ ஒரு மலையில் இயேசு ஏறியிருக்கிறார். இயேசு மலைப்பிரசங்கத்தை செய்த மலை என்று பாரம்பரியமாய் சொல்லப்படுகிற ஸ்தலம் ஒன்று உண்டு.*

*அது அழகான ஒரு ஸ்தலம். அந்த மலைச்சரிவானது கடல் மட்டம் வரை சரிந்திருக்கிறது. கீழேயுள்ள தண்ணீரும் சுற்றியிருந்த அழகான இயற்கைக் காட்சிகளும் கண்களுக்கு குளிர்ச்சியாய் அமைந்திருக்கிறது.*

***“அவர் உட்கார்ந்தபொழுது”***

*இது ரபீ மார்கள் போதிக்கும்போது பொதுவாக அமரும் முறை.*

***அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். 2. அப்பொழுது அவர் தமது வாயைத்திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்:***

*பெருந்திரளான மக்கள் கூட்டம் அங்கிருந்தாலும் சீஷர்களே இயேசுவுக்கு அருகாமையில் இருந்தனர். அங்கிருந்த மக்கள் அவர்கள் மூலமாகவே செய்தியைக் கேட்க முடிந்தது.*

*இயேசு உட்கார்ந்து போதித்த காரணத்தினால், இயேசுவை விட்டு தொலைவில் அமர்ந்திருந்தவர்கள் அவருடைய சத்தத்தை தெளிவாய் கேட்கமுடியாது.*

*அவர் அவர்கள் எல்லோருடைய பார்வையில் படும்படியாய் உயரத்தில் அமர்ந்திருக்கலாம். அந்த மலைச்சரிவின் உயரத்தில் அவர் அமர்ந்திருக்கும்போது, மக்கள் அவருக்கு கீழாக சரிவில் அமர்ந்திருக்கும்படி அந்த மலையின் அமைப்பு இருக்கிறது.*

*ஆகையால் இயேசு மகிழ்ச்சியைக் குறித்து பிரசங்கிக்கும்போது, அவர் சொல்லுகிறது என்ன என்பதை கேட்டு புரிந்துகொள்ளக்கூடிய மக்களிடத்திலேயே அவர் பிரசங்கித்தார்.*

*அவருடைய சத்தம் அங்கு வந்த திரள் கூட்ட மக்களின் காதுகளில் ஒலித்திருக்கவேண்டும்.*

*அவர் யூத ரபிமார்களின் அங்கீகாரத்தை எடுத்துக்கொண்டு, உட்கார்ந்து போதிக்கத் துவங்கினார்.*

*அவர் சொல்லுவதை முதலாவது கேட்டவர்கள், பன்னிரண்டு சீஷர்கள். அதைக் கடந்து அவர் மீது விசுவாசம் வைத்தவர்கள் மெய்யான விசுவாசிகள் என்னும் ஸ்தானத்திற்கு தகுதியானார்கள்.*

*அவர்கள் "**மட்தெட்டாய்**" விசுவாசிகள்.*

*பிரசங்கிக்கப்பட்ட செய்தி அனைத்து பருவத்தினருக்கும் ஏற்புடையது என்றாலும், அந்த செய்தியானது தேவன் வல்லமையாகவும் கிருபையாகவும் செயல்பட்டு யாருடைய இருதயத்தை மறுரூபமாக்க தீர்மானித்திருந்தாரோ, அவர்களால் மட்டுமே அதை பூரணமாய் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

*விசுவாசிக்கும் இருதயத்துடனும் கேட்கும் காதுகளுடனும் அவர் பேசுவது இன்ன என்பதை விசுவாசிகள் விளங்கிக்கொண்டனர். மற்றவர்களும் விளங்கிக்கொள்ளும் வகையில் இயேசுவின் போதனை இருந்தாலும், தேவன் அவர்களுடைய இருதயத்தில் கிரியை செய்யாத வரையில் அது அவர்களுக்கு பலனளிப்பதில்லை.*

*ஆகையால் இயேசு, அவருடைய இராஜ்யத்திற்கு நேர்மையாய் செயலாற்றுபவர்களுக்கு முதலாவது மகிழ்ச்சியின் அடிப்படைக் கொள்கைகளைப் போதித்தார்.*

*ராஜா பேசுகிற செய்தியை மக்களுக்கு பிரகடனப்படுத்தமுடியும். இயேசு போதித்த அந்த செய்தியை அறியாதவர்களுக்கு சொல்லும் தலையாய பொறுப்பை இயேசு பரமேறிய பின் சீஷர்கள் ஏற்று செயல்படுத்தினர். அந்த மக்கள் எங்கெல்லாம் இருந்தார்களோ அந்த இடங்களுக்கெல்லாம் பயணம் செய்து, இயேசு அவர்களுக்கு என்ன கற்றுக்கொடுத்திருக்கிறாரோ அவைகளை அவர்களுக்கு போதித்தனர்.*

*அதைத் துவக்குவதற்கு, இயேசுவினால் மட்டுமே மெய்யான மகிழ்ச்சியை வாக்குப்பண்ணமுடியும் என்னும் சத்தியத்தை நாம் முழுமையாய் நம்பவேண்டும்.*

*இயேசு கிறிஸ்து, மெய்யான, நிலையான சந்தோஷத்தைக் கொடுப்பதற்காகவே இந்த பூமியில் வந்தார். ஆனால் அதை எல்லோரும் ஏற்றுக்கொண்டு விசுவாசிக்கவில்லை. அவருடைய இராஜ்யத்திற்கு உட்பட்டிருந்தவர்களே அந்த மகிழ்ச்சியின் மேன்மையை பூரணமாய் ருசிக்கவில்லை.*

*இது தேவனுடைய நோக்கம்.*

*இது கிறிஸ்துவின் நோக்கம்.*

*இயேசு கிறிஸ்துவின் முதல் பிரசங்கமாய் புதிய ஏற்பாட்டில் பதிவுசெய்யப்பட்ட பிரசங்கமானது மகிழ்ச்சியைக் குறித்தது என்ற உண்மையைப் பிரதிபலிக்கிறது.*

*"பாக்கியவான்" (வேதத்தில் அதிகப்படியாய் பயன்படுத்தப்பட்ட வார்த்தை) என்னும் வார்த்தை "மகிழ்ச்சியடைபவன்" என்றே பொருள்படுகிறது.*

*பாக்கியவான் என்று சொல்லும்போது நாம் என்ன பேசுகிறோம்?*

*"**மக்காரியோஸ்**" என்னும் கிரேக்க வார்த்தை.*

*இந்த வார்த்தையானது இயேசுவின் இந்த மலைப்பிரசங்க வேதப்பகுதியின் துவக்கத்தில் மட்டும் **ஒன்பது முறை** இடம்பெறுகிறது. அதே நேரத்தில், அவ்வார்த்தை புதிய ஏற்பாட்டில் ஏறத்தாழ **ஐம்பது தரம்** இடம்பெற்றுள்ளது.*

*"பாக்கியவான்" என்ற வார்த்தைக்கு ஆத்துமாவின் மகிழ்ச்சி என்று அர்த்தங்கொடுப்பதே சிறந்தது.*

*அதை ஆசீர்வதிக்கப்பட்டவன் என்று மொழிபெயர்ப்பதும் சரியானது. அதைக் குறிப்பதற்காகவே இவ்வார்த்தை அதிகம் பயன்படுத்தப்படுகிறது.*

*பண்டைய கிரேக்க எழுத்துக்களில் அனைத்து சுகபோகங்களும் கொண்ட ஐசுவரியவானைக் குறிப்பதற்கு இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. செழிப்பான மனிதனைக் குறிக்க பிளாட்டோ இவ்வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார்.*

*கிரேக்க கடவுள்கள் தங்களை ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் எண்ணுவதாக அறிவிக்க இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிரேக்கக் கடவுள்கள் திருப்தியான ஒரு நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் எந்த பாதிப்பும் இல்லாதவாறு, மகிழ்ச்சியான ஒரு நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*எனவே இது மனநிறைவு மற்றும் திருப்தி பற்றிப் பேசுகிறது.*

*மகிழ்ச்சி, உள்ளான மகிழ்ச்சி, ஆசீர்வதிக்கப்பட்ட நிலை குறித்து நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அது வெளிப்புறமாய் நிகழுகிற மாற்றங்களினால் ஏற்படுவதில்லை, மாறாக, உள்ளான மாற்றங்களினால் ஏற்படக்கூடிய ஒரு விளைவு.*

*இந்த உலகத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் தங்களுடைய உள்ளான உணர்வு நேர்மறையாய் அமைந்தாலோ அல்லது வெளிப்புறமான சூழ்நிலை நேர்மறையானதாய் அமைந்தாலோ மகிழ்ச்சியை அனுபவிக்கக்கூடும். அவைகள் இரண்டும் தற்காலிகமான ஒன்று.*

*நிரந்தரமான, நிலையான மகிழ்ச்சி நிலை, ஆசீர்வாதத்தின் நிலை, பாக்கியவான் ஸ்தானம், நலமாய் வாழக்கூடிய வாழ்க்கை ஆகிய இவைகளே புதிய ஏற்பாட்டில் நாம் தேடும் வாழ்க்கையின் அர்த்தம்.*

*மேலும் இந்த வார்த்தை குணாதிசயங்களையும் குறிக்கிறது. இது விசுவாசிகளோடு தொடர்புடையது. ஆகையால் அதைக் குறித்த தெளிவு நமக்கு அவசியம்.*

*விசுவாசிகளை குறிக்கவே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. விசுவாசிகளல்லாதவர்களைக் குறிக்க வேதத்திலெங்கிலும் இந்த வார்த்தை பயன்படுத்தப்படவில்லை.*

*ஆகையால் நிலையான மகிழ்ச்சி, மெய்யான ஆசீர்வாதம், மனநிறைவு, திருப்தி ஆகிய குணாதிசயங்கள் அனைத்தும் தேவனை அறிந்தவர்களுக்கே பொருந்தக்கூடிய சுபாவம்.*

*இந்த வார்த்தை தேவனைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*சங்கீதம் 68:35, தேவனே, உமது பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து பயங்கரமாய் விளங்குகிறீர், இஸ்ரவேலின் தேவன் தம்முடைய ஜனங்களுக்குப் பெலனையும் சத்துவத்தையும் அருளுகிறவர், தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.*

***சங்கீதம் 72:18, இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; அவரே அதிசயங்களைச் செய்கிறவர்.***

***சங்கீதம் 119:12, கர்த்தாவே, நீர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; உம்முடைய பிரமாணங்களை எனக்குப் போதியும்.***

***1 தீமோத்தேயு 1:12, என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்.***

***1 தீமோத்தேயு 6:15, அந்தப் பிரசன்னமாகுதலைத் தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்,***

*எனவே தேவன் இயல்பாகவே மகிழ்ச்சி, நிறைவு, திருப்தி, ஆசீர்வாதம் மற்றும் பாக்கியம் ஆகிய குணாதிசயங்களுக்கு உட்பட்டவர். தேவனுடையவர்களும் அந்த ஆசீர்வாதத்தின் பங்காளிகளாக மாற்றப்படுகின்றனர். இது தேவன் மற்றும் கிறிஸ்துவுக்கு பயன்படுத்தப்பட்டு, அவர்களுடைய தெய்வீக தன்மையை பிரதிபலிக்கிறது.*

***2 பேதுரு 1:3, தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி,***

*கிறிஸ்து மூலமாய் நமக்கு அளிக்கப்பட்ட கிருபையினாலே நாம் தேவனுடைய ஜீவனாலே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். தேவனுடைய ஆசீர்வாதத்தின் பங்காளிகளாய் மாறியிருக்கிறோம். மகிழ்ச்சி, நிறைவு, திருப்தி, சந்தோஷம் என்று தேவன் மட்டுமே அனுபவிக்கும் சுபாவங்களை நாமும் அனுபவிக்க அனுமதிக்கப்படுகிறோம்.*

*தெய்வீக சுபாவத்தின் பங்குதாரர்களாய் மாறாத பட்சத்தில் இந்த மெய்யான சந்தோஷத்தில் நாம் பங்கேற்க முடியாது.*

*இந்த வேதப்பகுதியில் ஒரு கிறிஸ்தவனாய் நாம் கற்றுக்கொள்ளப் போகிறோம். கர்த்தராகிய தேவனை விசுவாசிக்கிறவர்களுக்காகவே இந்த வேதப்பகுதி அமைந்துள்ளது.*

*கிறிஸ்துவின் மீது விசுவாசமுள்ளவர்களாகி தேவனண்டை சேர்ந்தவர்களுக்கான வேதப்பகுதி இது.*

*தன்னுடைய பாவமன்னிப்பிற்காக சிலுவையை நாடி வந்தவர்களுக்காகவும், நீதிமான் என்று ஏற்படுத்தப்பட்ட அங்கீகாரத்தை மட்டுமல்லாது, புதிய சுபாவமாகிய தெய்வீக சுபாவத்தை தரித்துக்கொள்வதின் மூலம் மெய்யான தெய்வீக சந்தோஷத்தின் பங்காளர்களாய் மாறுவதற்கான ஆலோசனையை இவ்வேதப்பகுதி கொடுக்கிறது.*

*கிறிஸ்துவின் மூலமாக ஒருவன் தேவனை அறிகிற அறிவிற்குள் வருகிறான். பின்னர், இந்த சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கிறான்.*

*இயேசு, உள்ளான குணாதிசயங்களைக் குறித்துப் பேசுகிறார். ஏதோ ஒரு சில நேரங்களில் சம்பவிக்கக்கூடிய தற்காலிகமான உணர்வைக் குறித்தோ அல்லது மாறக்கூடிய வெளியரங்கமான சுபாவங்களைக் குறித்தோ இயேசு இங்ஙனம் பேசவில்லை.*

*மீட்பின் சரித்திரத்தில் புதிய உடன்படிக்கையையும், அந்த புதிய உடன்படிக்கைக்கு மக்களை பாத்திரவான்களாக்கும் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நிறைவேற்றவே மேசியா வந்தார். புதிய உடன்படிக்கையைக் கொடுப்பதே அந்த மெய்யான ஆசீர்வாதம்.*

*சரித்திரத்தின் முதல் ராஜாவாகிய ஆதாமோடு பழைய ஏற்பாடானது துவங்குகிறது.*

*சகல சிருஷ்டிப்பையும் ஆண்டுகொள்ளும் அதிகாரம் ஆதாமுக்குக் கொடுக்கப்பட்டது.*

***ஆதியாகமம் 1:28, பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.***

*ஆனால் ஆதாம் ஒரு ராஜாவாக தோற்றுப்போய்விட்டார். அதின் விளைவாய் முழு மனுஷீகமும் பாவத்தில் தள்ளப்பட்டது.*

*பழைய ஏற்பாடு சாபத்தோடு நிறைவடைகிறது.*

***மல்கியா 4:6, நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.***

*பழைய ஏற்பாடு பாவத்தோடு துவங்கி, சாபத்தோடு நிறைவடைகிறது.*

*புதிய ஏற்பாடு இயேசு கிறிஸ்து என்னும் ஆசீர்வாதத்தோடு துவங்குகிறது. அந்த ஆசீர்வாதம் புதிய உடன்படிக்கையோடு தொடர்புடையது. தன்னுடைய ஆட்சியில் என்றுமே தோல்வியை காணாத ஒரு ராஜாவோடு புதிய ஏற்பாடு துவங்குகிறது. ஆசீர்வாதமே அவருடைய செய்தி.*

*முதலாவது ஆதாம், ஒரு அழகான தோட்டத்தல் சோதிக்கப்பட்டு தோல்வியை தழுவினார்.*

*கடைசி ஆதாம், கடினமான வனாந்திரத்தில் சோதிக்கப்பட்டு, வெற்றியடைந்தார்.*

*முதல் ஆதாம், பாவத்தில் விழுந்து, பரதேசிலிருந்து வெளியேற்றப்பட்டான்.*

*கடைசி ஆதாம், தன்னோடு சிலுவையில் தொங்கிய கள்ளனையும் மனந்திரும்ப வைத்து, "இன்று என்னோடு கூட பரதேசிலிருப்பாய்" என்று வாக்களிக்கிறார்.*

*ஆதாமின் தலைமுறைகளை உள்ளடக்குகிற புத்தகம் சாபத்தோடு நிறைவடைகிறது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் தலைமுறைகளோடு துவங்கும் மத்தேயு புத்தகம் வாக்குறுதியோடு நிறைவடைகிறது.*

***வெளிப்படுத்தின விசேஷம் 22:3-4, இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். 4. அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்.***

*பழைய ஏற்பாடு, நியாயப்பிரமாணத்தைக் கொண்டு மனிதனின் இயலாமையை முன்வைக்கிறது.*

*புதிய ஏற்பாடு, கிறிஸ்துவின் ஜீவனைக் கொடுக்கச் செய்து மெய்யான சந்தோஷத்தை மனுஷீகத்திற்கு கொடுத்திருக்கிறது.*

*ஆகையால், ஆதாமின் வீழ்ச்சியை மாற்றி, மனுஷீகத்தை தேவனுடைய மகிமையான இராஜ்யத்திற்கு தகுதிப்படுத்தும் ராஜாவை மத்தேயு வெளிப்படுத்துகிறார்.*

***வெளிப்படுத்தின விசேஷம் 1:5-6, உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின்ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. 6. நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களறநம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.***

*புதிய ஏற்பாடு முழுமையும் ஆசீர்வாதத்தையும் மகிழ்ச்சியையும் வாக்களிக்கிறது.*

*புதிய ஏற்பாடு நிறைவேறுதலையும் திருப்தியையும் மையப்படுத்துகிறது.*

*அது மக்களின் ராஜாவைக் குறித்த செய்தி!*

*மெய்யான மகிழ்ச்சியைக் கொடுக்க வரும் இயேசு என்னும் ராஜாவை மத்தேயு முக்கியப்படுத்துகிறார். அவர் ஆளுகை செய்யும் தன்னுடைய இராஜ்யத்தின் அங்கத்தினர்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கவே வந்திருக்கிறார்.*

*அதுவே அவருடைய நோக்கம்!*

இந்த சந்தோஷத்தின் மத்தியில், துயரமான முரண்பாடும் இருக்கிறது. மெய்யான சந்தோஷத்தை அனுபவிக்கும் வாழ்க்கைக்கு பின்பு சில வலிகளும் துயரங்களும் இருக்கிறது.

துயரமும் வலியும் இல்லாததே மெய்யான சந்தோஷம் என்று உலகம் அறிந்திருக்கிறது. அனால் விசுவாசிகளாகிய நாமோ, துயரம் மற்றும் வேதனைக்கு மத்தியிலேயே மெய்யான சந்தோஷத்தை அனுபவிக்க முடியும் என்று அறிந்திருக்கிறோம். இயேசு அவருடைய சந்தோஷத்தை நமக்குக் கொடுத்தவுடன் எல்லாமே மாறிவிட்டது.

மகிழ்ச்சிக்கான உலகத்தின் பார்வை:

- வெற்றிபெற்ற நபர்களே மகிழ்ந்திருக்க முடியும்.
- ஐசுவரியவான்களே மகிழ்ந்திருக்க முடியும்.
- காதலில் இருக்கும் நபரே மகிழ்ந்திருக்க முடியும்.
- தனக்கானதை போய் சுதந்தரிப்பதே மகிழ்ச்சி, தன்னுடைய பாதையில் இருக்கும் அனைவரையும் தள்ளிக்கொண்டு போய் தனக்கானவற்றை எடுத்துக்கொள்வதில் தான் மகிழ்ச்சி இருக்கிறது.
- தனக்கானவைகளை பெற்றுக்கொள்வதே மகிழ்ச்சி.

ஆனால் இது இயேசுவின் திட்டமோ, பாதையோ, தெய்வீக சுபாவமோ அல்ல.

- ஐசுவரியவான்களே மகிழ்ச்சியாய் இருக்கமுடியும் என்று இயேசு சொல்லவில்லை.
- பிரபலமானவர்களே மகிழ்ச்சியாயிருக்கமுடியும் என்றும் அவர் சொல்லவில்லை.
- நேர்மையாய் இருப்பவர்களே மகிழ்ச்சியாய் இருக்க முடியும் என்றும் அவர் சொல்லவில்லை.
- வெற்றிபெற்றவர்களே மகிழ்ந்திருக்கமுடியும் என்றும் அவர் சொல்லவில்லை.

மாறாக இயேசு,

- ஆவியில் எளிமையுள்ளவர்கள்,
- துயரப்படுகிறவர்கள்,
- சாந்தகுணமுள்ளவர்கள்,
- நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள்,
- இரக்கமுள்ளவர்கள்,
- இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்,
- சமாதானம் பண்ணுகிறவர்கள்,
- நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள்,

- *அவமானப்படுகிறவர்கள்*

*ஆகியோர் பாக்கியவான்கள் என்று சொல்லுகிறார்.*

*இது முரண்பாடாய் தெரிகிறது.*

*உலகம் எதிர்பார்க்கும் மகிழ்ச்சியை நீங்கள் தேடினால் அது இந்த பட்டியலில் இடம்பெறவில்லை. சபிக்கப்பட்ட பூமியில் விளைந்த மரமானது கொடுக்கும் மகிழ்ச்சியானது, இயேசு கொடுக்கும் மகிழ்ச்சியோடு எவ்விதத்திலும் ஒப்பிட முடியாதது.*

***சாலமோன் தெளிவான ஒரு உதாரணம்.***

- *அவர் தாவீதின் ராஜவம்சாவழியில் வந்தவர். அவரைக் காட்டிலும் தேசப்பற்றாளன் யாரும் இருக்கமுடியாது.*
- *தேவனுடைய நகரத்தில் பூமி எப்படியிருக்கிறதோ அவருடைய அரண்மனையும் அதற்கான ஒளிரும் உதாரணமாயிருக்கிறது.*
- *வெள்ளியை கற்குவியலைப்போல் வைத்திருந்தார் என்று அவருடைய ஆஸ்தியை வேதம் கணக்கிடுகிறது.*
- *விதவிதமான உணவு, தொழுவங்கள், குதிரைகள், கட்டிடங்கள், வேலைக்காரர்கள், திராட்சைத் தோட்டங்கள், மீன் குளங்கள், தோட்டங்கள், வரையறையில்லாத பெண்கள் என்று பலவிதத்தில் அவர் மகிழ்ச்சியை தேடினார்.*
- *அவருடைய புத்திசாலித்தனத்தை உலகத்தின் எந்த மனிதரோடும் ஒப்பிடமுடியாது.*
- *அவர் மற்றெல்லோரைக்காட்டிலும் ஞானத்தில் சிறந்தவராகவும் விளங்கினார்.*

***ஆனால் அதில் அவர் மகிழ்ச்சியடைந்தாரா?***

*இல்லை!*

*இல்லவே இல்லை!!*

*சாலமோன் எல்லாவற்றிலும் வெறுமையைத் தான் கண்டுபிடித்தார்.*

*பிரசங்கி புத்தகத்தை நாம் வாசிக்கும்போது, எல்லாமே பிரயோஜனமற்ற வெறுமையானவைகள் என்பதை நாம் அறிகிறோம்.*

*எல்லாம் மாயை!*

*சாலமோன் மீண்டும் மீண்டும் அதைச் சொல்லுகிறார்.*

*செழிப்பான வாழ்க்கையில் மனிதன் நிறைவைக் காணமுடியாது. அது மகிழ்ச்சிகான பாதை அல்ல.*

*இன்பம் மகிழ்ச்சிக்கான பாதையல்ல.*

*ஆஸ்திகள் மகிழ்ச்சிக்கான பாதையல்ல.*

*தற்காலிகமான சந்தோஷத்தை உங்களுக்குக் கொடுக்கும் அழிவுக்குரிய மகிழ்ச்சியின் பாதையில் நம்முடைய வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணிப்பது வீணானது.*

*சபிக்கப்பட்ட பூமியில் நிலையான மகிழ்ச்சி இல்லை. தீமையான இந்த உலகில் அது கிடைப்பதில்லை.*

***ஏன்?***

*ஏனென்றால் மாம்சத்திற்குரிய காரியங்கள் ஆத்துமாவைத் தொடுவதில்லை.*

*ஆவிக்குரிய தேவையை மாம்ச காரியங்களைக் கொண்டு உங்களால் பூர்த்தி செய்ய முடியாது.*

*மெய்யான மகிழ்ச்சியை அடைய விரும்பும் எவரும் உலகத்தின் காரியங்களைக்கொண்டு தங்கள் இருதயத்தை திருப்திசெய்ய முடியாது.*

*புயலின் மத்தியில் இருதயத்திற்கு சமாதானத்தைக் கொடுக்க முடியாத எந்த உலகப்பொருட்களும் நிலைத்திருக்கக் கூடிய மகிழ்ச்சியைக் கொடுக்க முடியாது. காயப்பட்ட ஆவியில் எண்ணெயை ஊற்றமுடியாது.*

*சவுல் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானபோது அவனுடைய ராஜ மேன்மை அவனுக்கு எந்த விதத்திலும் உதவவில்லை.*

*உலகத்தின் காரியங்களைக் கொண்டு ஆவியை திருப்தியடைய செய்ய முயற்சிப்பது மதியீனமான முயற்சி.*

***நீதிமொழிகள் 23:5, இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? அது கழுகைப்போலச் சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோம்.***

*வெளியரங்கமான மாம்ச காரியங்கள் நிலையான ஆத்தும திருப்தியை கொடுக்கமுடியாது.*

***பிரசங்கி 5:13, சூரியனுக்குக் கீழே நான் கண்ட வேறொரு கொடிய தீங்குமுண்டு; அதாவது, ஐசுவரியமானது அதை உடையவர்களுக்கே கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுவதாம்.***

*ஐசுவரியம் பெருமைக்கும் இச்சைக்கும் தீனிபோடுகிறது.*

*அது வலையில் இருக்கும் கண்ணி.*

*அவைகள் தேவனுடைய வார்த்தையை மீறச் செய்கிறது.*

*முட்கள் துணிகளை கிழிப்பதைப் போன்று ஐசுவரியம் ஆத்துமாவைக் கிழிக்கக்கூடியது.*

*ஐசுவரியம் மெய்யான மகிழ்ச்சியைக் கொண்டுவர முடியாது.*

உலகத்தின் வழிகளில் மெய்யான மகிழ்ச்சியை கொண்டுவர முடியாது என்பதே இயேசுவின் வார்த்தைகளின் மூலம் தேவன் நம்மோடு பேச விரும்புகிற சத்தியம்.

மரித்தோரிடத்தில் ஜீவனுள்ளோரை கண்டுபிடிக்கமுடியாது.

மகிழ்ச்சி இந்த உலகத்தில் இல்லை.

உலகத்தால் அதைக் கொண்டுவர முடியாது.

அதை நமக்குக் கொடுக்கவும் முடியாது.

இது ஆவிக்குரிய ரீதியானது. இது தேவனுடைய சாராம்சம். தேவனுடைய சுபாவத்தைப் பகிர்ந்துகொள்ளுகிறவர்கள் மட்டுமே அவற்றை அனுபவிக்க முடியும்.

இந்த பிரம்மாண்டமான சத்தியத்தை வெளிப்படுத்தவே இயேசு ராஜாவாக வந்தார். உள்ளான மற்றும் ஆவிக்குரிய தன்மை கொண்ட இராஜ்யத்தின் கொள்கைகளை அறிமுகப்படுத்தவும் அவர் வந்திருக்கிறார்.

யூதர்கள் அரசியல் ரீதியான இராஜ்யத்தை எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் மாம்சத்திற்குரிய இராஜ்யத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

அவர் அவர்களுக்கான ஆகாரத்தை அற்புதமாய் வரப்பண்ணி கொடுத்தபோது, அவர்கள் அவரிடமாய் ஈர்க்கப்பட்டனர். அவர் அவர்களின் வியாதியை சுகமாக்கியதையும் அவர்களுக்குள் இருந்த பிசாசை விரட்டியபோதும் அவர்களின் பூமிக்குரிய வாழ்க்கையை நிலைப்படுத்தியதையும் கண்ட மக்கள் அவரிடம் அதிகமாய் ஈர்க்கப்பட்டனர்.

ஆனால் அவர்களின் பாவ வாழ்க்கையை சுட்டிக்காண்பித்து, அவர்கள் தேவனை விட்டு தூரமாய் இருப்பதை அவர்களுக்கு உணர்த்தி, தேவனுடைய சுபாவங்களின் பங்குதாரர்களாய் மாறி, தங்களுடைய பாவத்தை உணர்ந்து, மனந்திரும்பி, ஆசீர்வாதத்தை அவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டியதின் அவசியத்தை அவர்களுக்கு உணர்த்தியபோது, அது அவர்களுக்கு பிரச்சனையாய் தெரிந்தது.

இயேசுவின் மலைப்பிரசங்கத்தில், இராஜ்யத்தின் சமுதாய மற்றும் அரசியல் ரீதியான காரியங்களையோ குறித்து இயேசு ஒரு வார்த்தையையும் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யூதர்கள் அதை ஒரு பெரிய பொருட்டாய் எண்ணினர். ஆனால் இயேசு அவைகளை சற்றும் பொருட்படுத்தவில்லை.

மலைப்பிரசங்கத்தின் முக்கியத்துவம் என்னவென்றால்,

மனிதன் யார், யாரில்லை

மனிதன் என்ன செய்கிறான் அல்லது

மனிதனிடத்தில் என்ன உள்ளது அல்லது

*மனிதன் எதை அடைகிறான்.*

*இயேசு ராஜாவின் ஊழியம் அனைத்துமே இதுபோன்ற கேள்விகளுக்கு பதிலளிப்பதாகவே இருந்துள்ளது. அவருடைய போதனையைக் கேட்க வந்த அனைவரும், மனிதன் எதை சுதந்தரித்துக்கொள்ள முடியும், அவன் யாராக மாற முடியும், அவன் அதை எவ்வாறு சுதந்தரித்துக்கொள்ள முடியும் போன்ற கேள்விகளுக்கு விடை தெரிந்துகொள்வதை அதிகம் விரும்பினர். இயேசு தன்னை யார் என்று அடையாளப்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். அதினால் தான் அவர் "என்னுடைய இராஜ்யம் இந்த பூமிக்குரியது அல்ல" என்கிறார்.*

*ஆகையால் பாக்கியவான்களின் ஸ்தானம் என்பது தேவனுடைய இயல்பான சுபாவத்தின் பங்காளர்களாய் மாறி, அவருடைய ஆசீர்வாதத்தின் பிரதிநிதிகளாய் மாறுவதாகும். இது உலகத்தில் உள்ளவைகளுக்கு முற்றிலும் முரண்பாடானவைகள்.*

*தேவனுடைய இந்த வரையறையில் உலகத்தின் எந்த காரியங்களும் பொருந்தாது. உலகத்தின் ஆசீர்வாதங்கள் மாம்சீகத்திற்கும் பூமிக்கும் உரிய கடந்தபோகக்கூடியவைகள். ஆனால் தேவனுடைய ஆசீர்வாதம் என்பது ஆவிக்குரிய, நித்திய இராஜ்யம்.*

*அவர்கள் தேவன் விரும்புகிற விதமாய் தங்களுடைய வாழ்க்கையை வாழவேண்டும் என்று அதின்படி வாழத் தீர்மானிப்பர்.*

*இஸ்ரவேலின் மார்க்க நம்பிக்கைகள் மாறுபட்டது.*

*இஸ்ரவேல் மக்களின் நம்பிக்கைகளில் பல குழப்பங்கள் நிலவியது. அதினால் அவர்களுக்குள் பல்வேறு மக்கள் கூட்டங்கள் என்று பிரிந்திருந்தனர்.*

1. *பரிசேயர்கள்*
2. *சதுசேயர்கள்*
3. *எஸினேயர்கள்*
4. *செலோத்தியர்கள்.*

- *பரிசேயர்கள், பாரம்பரியத்திலும் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்படிதலிலும் தான் மகிழ்ச்சி இருக்கிறது என்பதை நம்பினர்.*
- *சதுசேயர்கள், நடைமுறை வாதத்திலும் தத்துவ ரீதியான வாழ்க்கையிலும் மகிழ்ச்சியைத் தேடினர்.*
- *எஸினேயர்கள், தன்னை வெறுப்பதிலும் உலகத்திலிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்வதிலும் மகிழ்ச்சியை அனுபவித்தனர். இவர்கள் துறவறம் பூண்டு தங்களை சமுதாயத்திலிருந்து தனிமைபடுத்திக்கொண்டு, வனாந்திரமான பகுதிகளில் குகைகளில் வசித்தனர்.*
- *செலோத்தியர்கள், ரோமர்களை பல சந்தர்ப்பங்களில் தாக்கினர். அதில் சிலர் குறுகிய பட்டயங்களை தங்களின் கையுறைகளுக்குள் சொருகி வைத்து, ரோமர்களை கண்ட மாத்திரத்தில் அதை அவர்களில் கழுத்தில் பாய்ச்சி அவர்களை*

கொலை செய்யும் சற்று கடினமான கூட்டம். தங்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் ரோமர்களை வீழ்த்துவதின் மூலம் அவர்கள் மகிழ்ச்சியை அனுபவித்தனர்.

- பரிசேயரின் பார்வையில் திரும்பிப் போவதே மகிழ்ச்சி. இவர்கள் ஏக்கமுடைய ஜனங்கள். இவர்கள் பழைய மார்க்கத்திற்கு திரும்புவதையே குறிக்கோளாய் கொண்டவர்கள்.
- சதுசேயரின் பார்வையில் முன்னேறி செல்வதே மகிழ்ச்சி. பழமையிலிருந்து விலகி, நவீன வாழ்க்கையை தத்தெடுத்துக்கொள்ளும் நடைமுறை வாழ்க்கையை விரும்புவர்கள் இவர்கள்.
- எஸினேயர்களின் பார்வையில் சமுதாயத்திலிருந்து தன்னை தனிமைபடுத்திக் கொள்வதே தங்களின் மகிழ்ச்சியாய் கருதினர்.
- செலோத்தியர்களின் பார்வையில் எதிர்த்து நின்று கிளர்ச்சியைத் தூண்டி கொலையையும் செய்து தங்கள் மகிழ்ச்சியை அனுபவித்தனர்.

- பரிசேயர்கள் நவீன காலத்தின் காரியங்களை நிராகரித்து நியாயப்பிரமாணத்திற்கும் பாரம்பரியத்திற்கும் திரும்புவது வழக்கம். அவர்கள் தங்களின் பழமையை பிடித்துக்கொண்டு மேசியாவையே கொலைசெய்தனர்.
- சதுசேயர்கள் பழமையையும் பாரம்பரியத்தையும் நிராகரித்து நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் வாழக்கூடியவர்கள். மேசியா பழமையான தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல் என்பதினால், இவர்களும் மேசியாவை நிராகரித்தனர்.
- எஸினேயர்கள் பரிசுத்த வாழ்க்கை வாழ விரும்புபவர்கள் என்பதினால், மக்களோடு சமுதாயத்தில் ஒன்றி வாழாமல் தங்களை வேறுபிரித்துக்கொள்ள நினைப்பவர்கள். இவர்களைப் பொறுத்தவரையில் பரிசுத்தம் என்பது நீங்கள் எங்கு வாழுகிறீர்கள் எப்படி வாழுகிறீர்கள் என்பதைப் பொருத்தது.
- செலோத்தியர்கள் கடினமான புரட்சிக்காரர்கள். இயேசு கிறிஸ்துவின் போதனையையும் இவர்கள் நிராகரித்தனர்.

இந்த பல்வேறு யூத மார்க்க கூட்டத்தினர்கள் தங்களுடைய பார்வையில் மகிழ்ச்சியைத் தேட முற்பட்டனர். ஆனால் அதை அவர்கள் கண்டுபிடிக்கக் கூடாமற்போயிற்று. ஏனென்றால் அவைகளில் மகிழ்ச்சி இல்லை. மகிழ்ச்சி பாரம்பரியத்தில் இல்லை. தத்துவ ஆதிக்கத்திலும் நவீன சிந்தனைகளிலும் இல்லை. சுய வெறுப்பிலோ அல்லது சமுதாயத்திலிருந்து தங்களை வேறுபிரித்துக் கொள்வதிலோ இல்லை. ஆட்சியை கவிழ்ப்பதிலோ இல்லை.

இயேசு "மகிழ்ச்சி என்பது..." என்று அறிவிக்கும் சூழ்நிலையில் வந்து நிற்கிறார். மனிதருடைய இருதயத்தின் ஏக்கங்களுக்கு வித்தியாசமான கோணங்களில் பதிலளிக்கிறார்.

அவர் எல்லா மார்க்க குழுவினரையும் வெளிப்படையாய் நிராகரித்தார்.

- பரிசேயர்களையும் சதுசேயர்களையும் அவர் அடிக்கடி எதிர்த்தார்.

- *எஸினேயர்கள் மக்களின் நினைவிலிருந்தே மறைந்துவிட்டனர். அவர்கள் தங்களை தனிமைப்படுத்தி, அடையாளம் இல்லாமல் போய்விட்டனர்.*
- *செலோத்தியர்களில் பெரும்பான்மையினர் கி.மு.70இல் ரோமர்களால் கொலைசெய்யப்பட்டனர். அதினால் அவர்களும் காணாமல் போய்விட்டனர்.*
- *இயேசு மகிழ்ச்சியை வித்தியாசமான வழியில் உபதேசித்தார். மகிழ்ச்சி என்பது இருதயத்தை பொருத்த ஒன்று, வேறெதினாலும் அது சாத்தியமில்லை என்று போதித்தார்.*

*மக்கள் இயேசுவின் மலைப்பிரசங்கத்தை தங்களின் சமூக வாழ்க்கையில் கடைபிடித்தனர். அதை வெளியரங்கமாய் சமுதாயத்தில் நடைமுறைப்படுத்தினர். இது சமுதாய சுவிசேஷமாய் மாறியது.*

*ஆனால் அந்த முயற்சி தோல்வியுற்றது. இது சமுதாய சுவிசேஷம் இல்லை. இது ஒழுக்க ரீதியான செய்தியும் இல்லை. ஒரு உயர்ந்த தியான வாழ்க்கைக்கு கொடுக்கப்படும் அறைக்கூவலும் இல்லை.*

*இது தேவனுடைய இராஜ்யத்திற்குள் எப்படி நுழைவது என்பதை அறிவிக்கும் செய்தி. இந்த மகிழ்ச்சிக்கு உட்படும்போது அவர்களின் சிந்தை எப்படி இருக்கிறது என்பதை சீஷர்களுக்கு நினைவுபடுத்தியது. இது அவர்கள் பிரசங்கிக்கவேண்டிய செய்தி.*

***மத்தேயு 5:44, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்.***

*இயேசு மெய்யான விசுவாசிகளின் வாழ்க்கை முறையைக் குறித்து போதித்தார். அது தான் மலைப்பிரசங்கம். தேவன் நம்மை மகிழ்ச்சியாய் இருப்பதற்காகவே வடிவமைத்துள்ளார் என்னும் சத்தியத்தை அது உறுதிப்படுத்துகிறது. மேலும் அந்த மகிழ்ச்சியை சாத்தியமாக்கும் தேவனுடைய இராஜ்யத்திற்குள் நாம் பிரவேசிப்பது எப்படி என்பதையும் போதிக்கிறது.*

*இது வரிசைப்படுத்தலில் துவங்குகிறது. அவ்வாறு துவங்கி, இராஜ்யத்தின் குடிமக்களுடைய வாழ்க்கையைக் குறித்ததான பிரசங்கத்திற்குள் பயணிக்கிறது.*

*இது சிந்தைக்கு உரியது. இது நாம் சுதந்தரித்துக்கொள்ளும் பொருள் அல்ல. இது ஆவியில் எளிமை, துயரம், சாந்தகுணம், நீதியின் மீதான பசி தாகம், இரக்கம், சுத்தம், மற்றும் சமாதானம் என்னும் ஆவிக்குரிய பண்புகள்.*

*மகிழ்ச்சி சிந்தையிலிருந்து தோன்றுகிறது.*

*தேவனுடைய சிந்தையை தரித்துக்கொண்டு அவருடைய குணாதிசயங்கள் நம்மில் வெளிப்பட்டு, அவருடைய தெய்வீக சுபாவத்தின் பங்காளிகளாக மாற்றப்படுகிறோம்.*

*ஆகையினால் மகிழ்ச்சி என்பது உள்ளிருந்து உருவாகி, வெளியரங்கமாய் வெளிப்படுகிறது என்று இயேசு சொல்லுகிறார். உபத்திரவம் மற்றும் கவலையின் ஊடாய் நாம் கடந்துபோனாலும் நம் சந்தோஷம் பறிபோகாது.*

ஆவியில் எளிமையாய் இருப்பதின் மூலம் தேவனோடு உறவு ஏற்படுத்திக்கொள்ளும் மகிழ்ச்சியிலிருந்து அந்த வரிசை ஆரம்பிக்கிறது.

ஆவியில் எளிமையை ஒத்துக்கொள்வதின் மூலம் அது சாத்தியமாகிறது. என்னுடைய ஆவிக்குரிய இயலாமையை என் சிந்தைக்கு அது உணர்த்துகிறது. நான் பாவத்தில் இருக்கிறேன் என்னும் என்னுடைய ஸ்தானத்தை அறிவதே அந்த ஆவியின் எளிமை. வேறொன்றுமில்லை. அது துயரத்திற்கு நேராய் வழிநடத்தி, என் பாவத்தைக் குறித்து துக்கங்கொண்டாடச் செய்கிறது.